SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# ஜுலை 2016 பரீட்சை - AA2 மட்டம்
**(July 2016 Examination - AA2 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: 25**

# வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்
# (BLE)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவெ ஆனந்த நகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA2 பரீட்சை – ஜுலை 2016

## (25) வியாபார சட்டமும் ஒழுக்கநெறியும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறு நோக்கு வினாக்கானவிடைகள் (OTQs)**

**பத்து (10) கட்டாய வினாக்கள்.**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா 01ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா | விடைகள் |
|---|---|
| 1.1 | (1) |
| 1.2 | (3) |
| 1.3 | (2) |
| 1.4 | (3) |
| 1.5 | (2) |
| 1.6 | (4) |
| 1.7 | (2) |
| 1.8 | இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம்.<br>கம்பனிப் பதிவாளர்<br>முதலீட்டுச் சபை<br>கொழும்பு பங்கு பரிவர்த்தனை<br>பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு<br>இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச்சபை |
| 1.9 | வயதடையாதோர்<br>மனநலிவுற்ற நபர்கள்<br>மது போதைக்குட்பட்ட நபர்கள் |
| 1.10 | புதிய ஒப்பந்தமொன்றின் மூலம்<br>ஒப்பந்த முறிவொன்றின் மூலம்<br>நிறைவேற்றுகை மூலம்<br>ஒப்பந்த நிலைக்குலைவு |

**(20 புள்ளிகள்)**

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**05 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 02ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

முகவாரண்மையொன்று மறுக்கவியலாமையினால் இரு நபர்களிடையே உருவாக்கப்படுவதாகும். (மறுக்கவியலா முகவராண்மை). மறுக்கவியலாமை என்பது ஒரு நபர் "A" அவரது நடத்தையினால் (நடத்தை என்பது ஒரு செயல் அல்லது மௌனமாக இருக்கலாம்) நம்பிக்கையை இன்னுமொரு நபரின் மீது "B" ஏற்படுத்தலாம். "B" ஆனவர் அந்த நம்பிக்கையின் மீது செயல்படுவார். "B" நம்பிக்கை மீதான செயலின் பின்னர் "A" அவ்வாறான நம்பிக்கை பிழையானது என மறுப்பறிவிப்பது தடுக்கப்பட்டுள்ளது என்பதால்.
எனவே இங்கு "ABC Ltd" மற்றும் "அனில்" என்பவர்க்கிடையில் ஒரு முகவராண்மை உருவாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் "ABC Ltd" அதன் சொந்தகாரரால் அல்லது மௌனத்தால் "கமல்" என்பவர் அனிலை அதன் முகவராக கொண்டால் கம்பனி சார்பாக "அனில்" ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான உரிமையைப் பெற்றுக்கொண்டார். "கமல்" "அனிலுடன்" ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டதன் பின்னர், அதாவது அனில் கம்பனி ABC Ltd சார்பாக ஒப்பந்தமொன்றில் நுழைவதற்கு எந்த அதிகாரமும் இல்லை என கம்பனி மறுப்பதற்கு தடுக்கப்படுகின்றது. இது ஒப்பந்தத்தால் கட்டுப்பட்டதாக அமைகின்றது. எனவே, கமல் கம்பனியிடமிருந்து நட்ட ஈட்டை கோருவதற்கு உரிமையுடையவராகிறார்.

**(05 புள்ளிகள்)**

## வினா 03ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

கப்பற் செலவு நீங்களான ஒப்பந்தம் மற்றும் கிரயம், காப்புறுதி மற்றும் சரக்கு ஒப்பந்தம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடுகள்.

**கப்பற் செலவு நீங்களான ஒப்பந்தம் (FOB)**

இவ்வகையான ஒப்பந்தத்தில் கப்பற் தளத்தில் பொருட்களை ஏற்றுவதற்கான செலவினை விற்பனையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும். வாங்குபவர் கொள்களன் மற்றும் சரக்கு கப்பல் என்பவற்றை ஒழுங்கு செய்வார்.
கப்பற் தளத்திற்கு பொருட்கள் அடைந்தவுடன் பொருள் வழங்குதல் பூரணமாகின்றது.
பொருட்களின் மீதான உரிமையானது, பொருட்கள் கப்பற் தளத்தை வந்தடையும் போது வாங்குபவருக்கு மாற்றப்படுகின்றது.
வாங்குபவர் காப்புறுதி செலவு மற்றும் சரக்கு (கேள்வு) என்பவற்றைக் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**கிரயம், காப்புறுதி மற்றும் சரக்கு ஒப்பந்தம்**

இவ்வகையான ஒப்பந்தத்தில், கப்பற் தளத்தில் பொருட்களை ஏற்றல் மற்றும் காப்புறுதி, சரக்கு ஒப்பந்தம் என்பவற்றை விற்பனையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
கொள்களன் மற்றும் சரக்கு கப்பல் எனபவற்றை விற்பனையாளர் ஒழுங்கு செய்வர்.
இவ்வகையான ஒப்பந்தம், கப்பல் ஆவணங்களை விற்பனையாளர் கொள்வனவாளருக்கு வழங்குவதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றது பொருட்களை பௌதீக ரீதியில் வழங்குவதால் அல்ல. கிரயம்,

காப்புறுதி மற்றும் சரக்கு ஒப்பந்தத்தின் கீழ் பொருளின் மீதான உரிமையானது ஆவணங்கள் மூலம் கொள்வனவாளருக்கு வழங்குவதன் மூலமாக மாற்றப்படுகின்றது.
கொள்வனவாளர் பொருட்களை இறக்கும் கிரயம், இறக்குமதி தீர்வை மற்றும் சுங்க கட்டணங்களை செலுத்துதல் வேண்டும்.

**(05 புள்ளிகள்)**

## வினா 04ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

குறுக்கு கோடானது எவ்வாறு காசோலையின் பெறுமதியை வழங்குதல் வேண்டும் என்பதை பெறுநர் அல்லது செலுத்தும் வங்கிக்கு வழங்கப்படும் ஒரு வழிப்படுத்தலாகும்.
குறுக்கு கோடிடல் இரு வகைப்படும்

1. சாதாரண குறுக்கு கோடிடல்
2. விசேட குறுக்கு கோடிடல்

**சாதாரண (பொது) குறுக்கு கோடிடல்**

பின்வரும் பதங்களை சேர்தோ அல்லது சேர்க்காமலோ காசோலையின் முகப்பக்கத்தில் சமாந்தரமான இரு கோடுகளை வரைதல் சாதாரன குறுக்கு கோடிடல் ஆகும்.

1. அன் (மற்றும்) கம்பனி
2. கைமாற்றத்தகாதது
3. பெறுநர் கணக்கு மட்டும்

**ஒரு சாதாரன குறுக்கு கோடிடலின் விளைவுகள்**

பொதுவான குறுக்கு கோடிட்ட காசோலையின் பெறுநர் வங்கி (Drawee Bank) எந்தவொரு வங்கியாளருடன் கூடிய கணக்கிற்கு மட்டும் அவ்வாறான காசோலைக்குரிய பெறுமதியை வழங்குதல் வேண்டும். வேறு வகையில் சொல்வதாயின் அவ்வாறான காசோலையின் பெறுமதியை பெறுநர் வங்கி (செலுத்தும் வங்கி) தனது கரும பீடத்தில் செலுத்துமாயின் அது பொதுவான குறுக்கு கோடிடலுக்கு முரணாக அமையும். பின்னர் உண்மையான காசோலையின் உரிமையாளருக்கு நட்டம் ஏதும் எழும் போது செலுத்தும் வங்கி பொறுப்பாகிவிடும்.

**விசேட குறுக்கு கோடிடல்**

ஒரு வங்கியாளரின் பெயரை இரு சமாந்தரமான கோடுகளுக்கிடையே அல்லது கோடுகள் இன்றியோ காசோலையின் முகப்பில் எழுதினால் அல்லது அன் (மற்றும்) கம்பனி, கைமாற்றத்தகாதது அல்லது பெறுநர் கணக்கு மட்டும் என்ற பதங்களை எழுதினால் அது விசேட குறுக்கு கோடிடலாகும்.

**விசேட குறுக்கு கோடிடலின் சட்டரீதியான விளைவு**

ஒரு விசேட குறுக்கு கோடிடலில் வங்கியானது வங்கியாளருடன் கூடிய ஒரு கணக்கிற்கு மட்டுமே காசோலையின் பெறுமதியை செலுத்துதல் வேண்டும். வேறு வகையில் கூறுவதாயின் காசோலைக்குரிய பெறுமதியை கருமபீடத்தில் செலுத்தப்பட கூடாது.

அதுமட்டுமன்றி ஒரு விசேட குறுக்கு கோடிடலில் பெயரிடப்பட்ட வங்கியை தவிர வேறு வங்கியாளரின் கணக்கிற்கு செலுத்தப்பட கூடாது.

விசேட குறுக்கு கோடிடலுக்கு முரணாக காசோலையின் பெறுமதியை செலுத்தும் வங்கி கொடுப்பனவு செய்யுமாயின் உண்மையான உரிமையாளருக்கு ஏற்படகூடிய இழப்பீட்டிற்கு செலுத்தும் வங்கி பொறுப்பாகும்.

**(05 புள்ளிகள்)**

## வினா 05ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) பணியாளர்களின் தொழிலை முடிவுறுத்துதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அடிப்படையில், தொழில்கொள்வோர் பின்வரும் ஒழுக்காற்று அற்றதன் கீழ் பணியாளர் ஒருவரின் தொழிலை முடிவுறுத்தும் உரிமையைக் குறிக்கும்.

1. பணியாளர் எழுத்துருவிலான அனுமதி அல்லது
2. தொழில் ஆணையாளரின் எழுத்துருவிலான அங்கீகாரம்

எவ்வாறாயினும் நன்நடத்தையின் அடிப்படையில் (ஒழுக்காற்று அடிப்படையில) ஒரு பணியாளரின் சேவையை முடிவுறுத்தலுக்கு கொண்டுவர தொழில்கொள்வோர் ஊழியரின் ஒப்புதலை அல்லது தொழில் ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற வேண்டியதில்லை.

ஒரு பணியாளர் பாரதூரமான நன்நடத்தையற்ற குற்றத்திற்கு உட்படுவாராயின் ஒரு தொழில் கொள்வோர் தனது சொந்த அதிகாரத்தின் கீழ் பணியாளரை தொழிலில் இருந்து அகற்ற முடியும். ஆனால் அமலின் பக்கத்தில் எவ்வித பிழையான நடத்தயும் இல்லை. இதன்படி பணியாளர்களின் தொழிலை முடிவுறுத்துகின்ற சட்டத்திற்கு இணங்க அமலை பணியிலிருந்து முடிவுறுத்த முடியாது.

(b) இச் சட்டமானது பின்வரும் பணியாளர் பிரிவுகளுக்கு பிரயோகிக்ககூடியன அல்ல.

- வணிகமொன்றில் 15 பணியாளருக்கு குறைவாக இருப்பின்.
- பணியாளர் 180 நாட்களுக்கு குறைவாக பணிபுரிந்திருத்தல்.
- உள்ளுராட்சி அதிகார சபை, பொது துறை, கூட்டுறவு துறை மற்றும் பொது கூட்டுதாபனத்தின் பணியாளர்கள்.
- கூட்டுறவு சங்கங்களில் உள்ளோர்.
- அரச கூட்டுதாபனங்கள்.
- சட்ட விரோதமான தொழிலில் ஈடுபடும் ஊழியர்கள்.
- பணியிலிருந்து தன்னிச்சையாக விளகிக்கொண்ட பணியாளர்கள்.

**(05 புள்ளிகள்)**

## வினா 06ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

- சிறந்த வாழ்க்கைக்கான உழைப்பின் தேவை
- முகாமையிடமிருந்து அழுத்தம்
- கண்டுப்பிடிக்கப்பட்ட வன்முறைக்கான அறிக்கையிடல்
- நிதியியல் பதிவுகளின் விடுபடல்
- நன்னெறி உணர்வுகள் இன்மை

**(05 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**03 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா 7ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) பங்காளர்களின் உரிமைகளும் கடமைகளும் பங்குடமை ஒப்பந்தத்தால் தீர்மானிக்கப்படுகின்றது. பங்குடமை ஒப்பந்தமானது பங்காளர்களின் ஏதேனும் உரிமை அல்லது கடமைகளை வழங்காது விடத்து அல்லது அவ்வாறான பங்குடமை ஒப்பந்தமொன்று இல்லாதவிடத்து பங்குடமை கட்டளை சட்டத்தின் 24வது பிரிவு பங்காளர்களின் உரிமைகளையும் கடமைகளையும் தீர்மானிப்பதற்கு பிரயோகிக்கப்படும்.

பங்குடமை கட்டளை சட்டத்திற்கமைய,

- இலாப நட்டங்கள் பங்காளரிடையே சமமாக பகிரப்பட வேண்டும்.
- ஒவ்வொரு பங்காளரும் தனது கொடுக்கல் வாங்கள் தொடர்பாக உண்மையான கணக்குகளையும் முழுதகவல்களையும் ஏனைய பங்காளருக்கு வழங்குதல் வேண்டும்.
- ஒவ்வொரு பங்காளரும் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நலன்கள் தொடர்பாகவும் முழுத்தகவல்களையும் வெளிப்படுதல் வேண்டும். அவ்வாறான தகவல்கள் பின்வருமாறு,
    a) நிறுவனத்துடன் சம்மந்தமான ஏதேனும் கொடுக்கள் வாங்கல்களிலிருந்து,
    b) பங்குடமை ஆதனங்களை பயன்படுத்தியதில் இருந்து,
    c) வணிக தொடர்பு மற்றும் பெயரில் இருந்து.

எனவே கபிலாவுடன் கொண்ட மேற்படி கொடுக்கல் வாங்கல்களில் இருந்து உழைக்கப்பட்ட இலாபத்தை பங்கீடு செய்வதற்கான பொறுப்பை நிஸங்க கொண்டுள்ளார்.

(b) பின்வரும் அடிப்படையில் நீதிமன்ற அணுசரணையுடன் பங்குடமை ஒன்று களைக்கப்பட முடியும்.

1. வியாபாரத்தைகொண்டு நடத்துவதற்கு பங்காளர் ஒருவர் இயலாமையைக் கொண்டிருத்தல்.
2. பங்குடமையின் தொழிலை கொண்டு நடத்துவதில் வேண்டுமென்றே பாதிப்பை ஏற்படுத்தும் குற்றம் ஒன்றை பங்காளர் ஒருவர் இழைத்திருத்தல்.
3. பங்குடமையின் ஒப்பந்தத்தை பங்காளர் ஒருவர் வேண்டுமென்றே தொடர்ச்சியாக முறித்தல்.
4. பங்குடமை வியாபாரம் ஒன்று நட்டமென்றால் மட்டுமே கொண்டு நடத்த முடியும் என கருதினால்.
5. பங்குடமை ஒன்றை களைத்தல் நீதியானதும் நியாயமானதும் என நீதிமன்றம் அபிப்ராயம் ஒன்றைக் கொண்டிருந்தால்.

**(10 புள்ளிகள்)**

## வினா 8ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) இழப்பீட்டு காப்புறுதி மற்றும் நிகழ்வுக் காப்புறுதி

1. **இழப்பீட்டு காப்புறுதி**

இழப்பீடு என்பது நட்டத்தை ஈடு செய்வதாகும். இங்கு காப்புறுதியாளர் நட்டத்தின் உண்மையான தொகையை கொடுப்பனவு செய்வார். குறிப்பிடப்பட்ட அணர்த்ததிற்கான தொகை காப்புறுதி தொகைக்கு மேலாக செலுத்தப்பட மாட்டாது.

ஆயுள் மற்றும் தனிநபர் விபத்து காப்புறுதி தவிர்ந்த ஏனைய ஒப்பந்தங்கள இழப்பீட்டு காப்புறுதியில் உள்ளடங்கும்.

2. **நிகழ்வு காப்புறுதி**

நட்டத்தை பொறுட்படுத்தாத, நிகழ்வு ஒன்றில் நடைபெறுகின்ற சம்பவத்தின் மீது கொடுப்பனவை செலுத்துவதற்கு காப்புறுதியாளரால் கையேற்க்கப்படும் காப்புறுதி நிகழ்வுக் காப்புறுதி எனப்படும்.

(உதாரணம் : ஆயுள் காப்புறுதி, தனிநபர் விபத்துக் காப்புறுதி)

எனவே இழப்பீட்டு காப்புறுதிக்கும் நிகழ்வு காப்புறுதிக்குமிடையே பின்வரும் பிரதான வேறுபாடுகளை இணங்காணலாம்.

**மையப்பொருள் (விடயம்)**

இழப்பீட்டு காப்புறுதியின் மையப்பொருள் பொருட்கள் அல்லது ஆதனம் ஆகும். ஆனால் நிகழ்வு காப்புறுதியின் மையப்பொருள் மனித உயிராகும்.

**நிகழ்வின் உறுதித்தன்மை**

இழப்பீட்டு காப்புறுதியில் காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு நடைபெறலாம் அல்லது நடக்காமலே போகலாம். நிகழ்வு காப்புறுதியில் காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு, ஒரு மனிதனின் இறப்பு ஆகும். அது நிச்சயமாக நடைபெறும். ஆனால் அது நடைபெறும் உண்மையான நேரம் நிச்சயமானதல்ல.

(b) பின்வரும் காப்புறுதி அடிப்படை தத்துவத்திற்கு இணங்க சுனில் ஒவ்வொரு காப்புறுதி கம்பனியிடமிருந்தும் ரூபா 30,000/- பெற்றுக் கொள்ள உரித்துடையவர் அல்ல.

**இழப்பீடு**

ஆயுள் காப்புறுதி மற்றும் தனிநபர் விபத்துக் காப்புறுதி தவிர ஏனைய காப்புறுதிகள் அணைத்தும் இழப்பீட்டு காப்புறுதி ஒப்பந்தத்தை கொண்டதால் செலுத்தப்படும் பணமானது ஆயுள் இழப்பை அல்லது காயங்களை இழப்பீடு செய்ய முடியாது. குறித்த அணர்த்தத்தில் இருந்து விளைகின்ற சேதம் அல்லது நட்டத்திற்காக காப்புறுதி செய்யப்பட்டதை இழப்பீடு செய்வதற்கே காப்புறுதி கம்பனி காப்புறுதி ஒப்பந்தத்தில் கையேற்றுள்ளது.

இழப்பீடு ஏற்படும் போது காப்புறுதி செய்தவர் உண்மையாக எழுந்த நட்டத்தின் பெறுமதியை மட்டுமே காப்புறுதி கம்பனியிலிருந்து மீளப்பெற முடியும். (ஆனால் காப்புறுதி ஒப்பந்ததிற்கு மேலாக அல்ல) இழப்பீட்டின் நோக்கம் யாதெனில், இழப்பீட்டிற்கு முன்னரான அவர் கொண்டுள்ள நிலையை மீளப்பெற செய்வதே ஆகும். எனவே காப்புறுதி செய்யப்பட்டவர் உண்மையான நட்டத்திற்கு மேலான இழப்பீடை பெற அனுமதிக்காது.

**பங்களிப்பு கோட்பாடு**

இரட்டைக்காப்புறுதியின் போது, அனைத்து காப்புறுதியாளர்களும் காப்புறுதி செய்யப்பட்ட விகிதாசாரத்திற்கு இணங்க நட்டத்தை பகிர்ந்து கொடுப்பனவு செய்ய வேண்டும் என்பதாகும்.

**(10 புள்ளிகள்)**

## வினா 9ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) பணமோசடி என்பது கறுப்புப் பணத்தை நல்லச்சொத்துகளாக மாற்றுவதாகும். அவ்வாறான பணத்தின் மூலத்தை மறைப்பதற்காக மற்றும் முறையான சட்டரீதியான மூலத்தில் இருந்து பெறப்பட்டது என்ற தோற்றத்தைக் கொடுப்பதற்காக அவ்வாறு செய்யப்படும். (Stained)

(b) சட்டரீதியான நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- போதை வஸ்த்து தொடர்பான குற்றங்கள்
- கடத்தல் நபர்
- இலஞ்சம்
- நாணயமாற்று கட்டுப்பாட்டு மோசடிகள் (Violations)
- பயங்கரவாதம்
- ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை நாடுகளுக்கிடையே மாற்றுதல்
- கூம்பக மோசடி

**(10 புள்ளிகள்)**

SRI LANKA

பகுதி - D

**கட்டாய வினா**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 10ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) கொடைமுனைவினை ஏற்பவருக்கு தகவல்களை வழங்கி அவர் அதனை பெற்றுக்கொண்டால் மட்டுமே கொடைமுனைவு வலுவுல்லதாக மாறும். (செல்லுபடியாகும்) கொடைமுனைவை ஏற்பவர் தொடர்பாடலுக்கு முன்பே கொடைமுனைவை ஏற்றுக்கொள்வராயின் இரு தரப்பினரிடையே செல்லுபடியாகும் ஒப்பந்தம் உருவாகாது.

ஏனெனில், ஏற்ப்பின் நேரத்தில் கொடைமுனைவை பெறுபவர்க்கு முன்பாக வலிதான கொடைமுனைவு (Offer) இருக்கவில்லை.

கொடுக்கப்பட்ட நிலைமைகளின் கீழ் சான்றிதழ்கள் அடங்கிய கோப்பினை திருப்பி தரும் எவருக்கும் வெகுமதி அளிக்கப்படும் என ரசித் விளம்பரம் செய்திருந்தார். இந்த விளம்பரம் ஒரு கொடைமுனைவாக கருதப்படும். ஏனெனில் வெகுமதி செலுத்துவது தொடர்பான விளம்பரம் ஓர் கொடைமுனைவாக கருதப்படும். (Carlil Vs Carbolic smoke balls co. Ltd)

எவ்வாறெனினும் இவ் கொடைமுனைவை சான்றிதழ் கோப்பினை ரசிதுக்கு கொடுத்த நிஷாதி அறிந்திருக்கவில்லை. ரசிதுக்கு சான்றிதழ் கோவையினை திருப்பி செலுத்தியது ஒரு ஏற்பாக கருதப்படுகின்றது. அதன் பின்னரே நிஷாதி விளம்பரம் பற்றி அறிந்துகொண்டார். இங்கு "நிஷாதி" வெகுமதிக்கு உரித்தானவரல்ல.

ஏனெனில் நிஷாதியின் ஏற்பு நடைபெறுவதற்கு முன்னர் ஒரு வலிதான கொடைமுனைவு ஏற்பட்டிருக்கவில்லை.

(b) பொருள் விற்பனை கட்டளை சட்டத்திற்கு இணங்க ஒரு விற்பனை நிகழ்ந்தது என்பதற்கு உட்கிடையான நிபந்தனை ஒன்று உண்டு. விற்பனையாளர் பொருட்களை விற்பதற்கான உரிமையை கொள்வார் அத்துடன் அங்கு ஓர் விற்பனை ஒப்பந்தம் உள்ளது. பொருளின் மீதான உரிமை கொள்வனவாளருக்கு மாற்றப்படும் போது விற்பனையாளர் பொருட்களை விற்பனை செய்வதற்கான உரிமையை கொள்வார். பின்னர், லெஸ்லியினால் களவாடப்பட்ட கணனியானது மீளப்பெறப்பட்டது. லெஸ்லிக்கு பொருள் மீதான உரிமை இல்லை. எனவே சமன் கூட கணனிக்கு நல்ல உரிமையைக் பெற்றுக்கொள்ள மாட்டார். கணனியானது உண்மையான உரிமையாளருக்கு திருப்பி கொடுக்கப்பட்டால் அதற்கான இழப்பை ஜெயலால் சமனிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர். இங்கு சமன் இழப்பை ஜெயலாலுக்கு திருப்பி கொடுத்தார் மற்றும் லெஸ்லிக்கு தான் கொடுத்த பணத்திற்காக லெஸ்லியின் மீது வழக்குத் தொடுத்தார். ஏனெனில் விற்பனையாளர் லெஸ்லி கணனியை விற்பனை செய்வதற்கு உரிமை கொண்டவர் அல்ல என்ற உட்கிடையான நிபந்தனை முறிக்கப்படுகின்றது. எனவே கொள்வனவாளர் லெஸ்லியிடமிருந்து இழப்பீட்டை மீளப்பெறுவதற்கான உரித்தைக் கொண்டுள்ளார்.

**(25 புள்ளிகள்)**

**பிரிவு *D* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2014 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*